நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## STC.No.1379/2025

## P.W. 6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜீ |
| கிராமம் | : | சேலம், தாதகாப்பட்டி அஞ்சல் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 25–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.11 PM

1. நான் தற்போது சேலம் சமூக நீதி மற்றும் மனித உரிமையியல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2024 ம் வருடம் நங்கவள்ளி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது ஏற்கனவே நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண்.75/2024 ச.பி.8( C ) உடனிணைந்த

20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ததை எனது பார்வையின் கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. பின்னர் சம்பவயிடத்திற்கு 22.04.2024 ம் தேதி 19.00 மணிக்கு சென்று அங்கிருந்த சாட்சிகள் பூபதிராஜா, புகழேந்தி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சாட்சிகள் முதல் நிலை காவலர் 173 கலையரசன், முதல்நிலை காவலர் 2233 செல்வேந்திரன், பூபதிராஜா, புகழேந்தி, முதல்கட்ட விசாரணை மேற்கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை படிவம் 91 மூலம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் நீதிமன்றத்திற்கு அனுப்பினார். **(மேற்படி கஞ்சா பொருட்கள் அழிக்கப்படுவதற்காக போதைபொருள் அழிப்பு குழுவிற்கு இந்த நீதிமன்றத்தின் கடித எண். 1694/2025, நாள்–25.09.2025 ன் படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அது தொடர்பான ஆவணங்களை குறியீடு செய்யப்படுவதற்காக முதல் விசாரணியின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**